

கோவை மாநகர கழக முன்னாள் செயலாளர் கோவை தென்றல் மு.இராமநாதன் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் தலைமையில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் அவரது திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தினர். இதில் கழக சொத்து பாதுகாப்புக் குழு துணைத்தலைவர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, கோவை மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### நாளை நடைபெறுகிறது!

## சேலம் கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. அறிவிப்பு!



சேலம், மே 15 -

சேலம் கிழக்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நாளை (16.05.2026 - சனிக்கிழமை) காலை 10.00 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட கழக பிரதிநிதிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:**

1. முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள்,

2. 14.05.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழகச் செயலாளர்கள் கூட்டம் சம்மந்தமாக,


3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### சேலம் மேற்கு மாவட்ட

## தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிவிப்பு!



சேலம், மே 15 -

சேலம் மேற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (15.05.2026 - வெள்ளிக்கிழமை ) காலை 10.00 மணியளவில், எடப்பாடி, நைனாம்பட்டியில் உள்ள, ஸ்ரீ நடராஜன் மஹால் திருமண மண்டபத்தில்", மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்கமுத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,

கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, ஆதி திராவிடர் நலக்குழு, மீனவர் அணி, இலக்கிய அணி, கலை , இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்று சூழல் அணி,

அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் :**

1) கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர்

## ஆனூர் ஜெகதீசனின் துணைவியார் திருமதி. ஜெ.ஆதிலட்சுமி அம்மையார் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே.15 -

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் ஆனூர் ஜெகதீசன் அவர்களின் துணைவியார் திருமதி. ஜெ. ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் இயற்கையெய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு :-

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் திரு. ஆனூர் ஜெகதீசன் அவர்களுடைய துணைவியார் திருமதி. ஜெ.ஆதிலட்சுமி அம்மையார் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமுற்றேன்.

ஐயா ஆனூரார் அவர்களின் பொதுவாழ்க்கைக்குப் பெருந்துணையாக இருந்த அம்மையார் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரை இழந்து வாடும் திரு. ஆனூர் ஜெகதீசன் ஐயா அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### மொழிப்போர் தியாகி

## எஸ்.எம்.சுந்தரராஜனின் மனைவி திருமதி.எஸ்.ரூபாவதி அம்மாள் மறைவு!



சென்னை, மே 15 -

மும்மொழிப் போராட்ட வீரரும், மொழிப்போர் தியாகியுமான நினைவில் வாழும் எஸ்.எம்.சுந்தரராஜனின் மனைவியும், பாளையம் (நில உரிமையாளர்) அவர்களின் இளைய மகளுமான திருமதி.எஸ்.ரூபாவதி அம்மாள் (வயது 86) நேற்று முன்தினம் பிற்பகல் 1.55 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதினை அறிவிக்க வருந்துகிறோம்.

செய்தியறிந்ததும் கழகத்தினர் மறைந்த திருமதி.ரூபாவதி அம்மாள் உடல் மீது மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (14.05.2026 - வியாழக்கிழமை) காலை 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து (நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, 9/6 கிராமத்தில்) புறப்பட்டு நுங்கம் பாக்கம் இடுகாட்டில் இறுதி சடங்குகள் நடைபெற்றன.



"ஜப்பான் நாட்டு தூதரக அதிகாரிகள் திருமதி. சுபாகிமோட்டோ மயுமி, திருமதி. ஆஷா ஆகியோர் கோவை மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வனைச் சந்தித்து நடந்து முடிந்த தமிழ்நாட்டு சட்டப்பேரவை தேர்தல் குறித்தும், புதிய அரசின் தொழில் வளர்ச்சி குறித்தும் ஆலோசனை நடத்தினர். இந்த ஜப்பான் நாட்டைச் சேர்ந்த அதிகாரி நம் கழக தலைவர் அவர்கள் மீது பெரும் மரியாதை வைத்து அவரின் சிறப்பான செயல்பாடுகளை பாராட்டி கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது. "கருப்பு சிவப்பு பேட்ஜ் தன் கைப்பையில் வைத்து பாதுகாத்து வருவதை காட்டி கண்டிப்பாக " Stalin Will Come Back Stronger என்று தன் நம்பிக்கையை வெளிபடுத்தினார்.

# வாலடித்து மேலெழும் வரிப்புலி திராவிட முன்னேற்றக் கழகம்!



உலகமே உற்றுநோக்கிய தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் முடிவுகள் வந்தேவிட்டது.

நினைத்தவை நிழல்களாக, நிஜங்களெல்லாம் கனவுகளாக, கானல் நீரான கதைகள் நாளும் நடந்தேறி வருகிறது.

"ஒருவரின் முதுகிற்குப் பின்னால் செய்ய வேண்டிய செயல் அவர்களை தட்டிக்கொடுப்பதே !" என்றான் ஆங்கில அறிஞன் ஆஸ்கார் ஒயில்ட்.

ஆனால், காட்டிக் கொடுப்பதையும், கழுத்தறுப்பதையும், நன்றி மறப்பதையும் முதுகில் குத்துவதையும் தங்கள் குலக்கலாச்சாரமாய் கொண்ட ஒரு துரோகப் பேரியக்கம் ஒரு புறம்.

1967 ல் விருகம்பாக்கம் மாநாட்டில் இசைமுரசு அனிபா, " பொய்யில் புலவரடி கண்ணம்மா!

இவர் பொதுத்தேர்தல் திருடரடி கண்ணம்மா! " என்று பாடியதற்கு ஏற்ப வாக்குப் பதிவு எந்திரத்தில் தங்கள் தந்திரப் போக்கை காட்டிய பாசிச பா.ஜ.க. மற்றொரு புறம்.

தேர்தல் ஜனநாயகத்தில் ஒரு மக்களுக்கான இயக்கம் வெற்றி தோல்வி என வேறு, வேறு பரிமாணங்களில் பயணிப்பது புதிதல்ல.

எடுத்துக்காட்டுகள் ஏராளம், ஏராளமாக உள்ளது.

ஆனால், தன்னை தமிழர் நல்வாழ்வு, உயர்வு, மேன்மை, வளர்ச்சி, வெற்றி, அடுத்தடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்லும் தொலைநோக்குப் பார்வையென தகவமைத்துக் கொண்ட தலைவனின் இயக்கம் யாருமே எதிர்பாராத வண்ணம் வெற்றி வாய்ப்பினை சொற்ப விகிதாச்சார அளவில் இழந்து நிற்பதுதான் வேதனையிலும் வேதனை!

அறிஞர் அண்ணா தான் எழுதினார், " வெள்ளையனே வெளியேறு! அந்நியப் பொருட்களை பகிஷ்கரிப்போம்!

BE INDIAN! BUY INDIAN! என்று எழுதியும், நாடு முழுவதும் பயணித்துப் பேசிவரும், காந்தியும், நேருவும் மற்ற காங்கிரஸ் தலைவர்களும் அதே வெள்ளைக்காரன் கண்டுபிடித்த பவுண்டன் பேனாவினால் எழுதி, அவன் அறிமுகப்படுத்திய ரயிலில் வலம் வந்தல்லவா வெள்ளையனை விரட்டப்பார்க்கிறார்கள்". என்று.

அதைப்போலத்தான் திராவிடப் பேரரசர் தளபதியவர்களின் நல்லாட்சியில் தந்த விடியல் பயணப் பேருந்துகளில் பயணித்து, விலையில்லா மடிக்கணினியில் மாய் மாலப் பொய்ச்செய்திகளைப் பரப்பி, தமிழினம் வீழ்ந்து போவதற்கென விபரீத முடிவை எடுத்தனர். விட்டில் பூச்சிகளாய் விளக்கொளியில் விழுந்த தமிழர்கள்.

நடைபெற்றது யாருக்கான தேர்தல்? எதற்கான தேர்தல்? என்றெல்லாம் சிந்திக்காமல் சிதைந்துபோனதே தமிழகத்தின் எதிர்காலம்!

இந்த மக்களை நம்பி, மனைவி பிள்ளை, உடல்நலம், உறவுகள் மறந்து, மாநிலம் முழுவதும் சுற்றிவந்த ஓய்வறியா உழைப்பாளியின் உழைப்பு உதாசீனப் பட்டதை உண்மைத் தமிழரின் மனம் ஒப்ப மறுக்கிறது.

"நன்றி கெட்ட உலகமடா ராமா! " என்று ரத்தக்கண்ணீரில் நடிகவேள் ராதா சாடிடுவார். அதுதானே இன்று நடந்தேறியது.

தலைவர் கலைஞர் 1990 ல் கலைவாணர் அரங்கில் நடைபெற்ற ஐம்பெரும் விழா கவியரங்கில் ஆற்றிய தலைமைக் கவிதையில்,( அப்போது தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் )

"ஆனது ஆகட்டுமே!
இந்த
ஆட்சிதான் போகட்டுமே!
மகுடமின்றி வாழ முடியா
மனிதர்களா நாம்?
சிசுவாகப் பிறக்கும் போதே,
சிம்மாசனத்துடனா
பிறந்தோம்?
சீதை வில்லுடன் பிறந்ததுபோல!
கொற்றக்குடையா? கொள்கையா? எதுவேண்டுமெனில்,
கொள்கையை விற்றுப் பிழைக்க,
வேறுநபர் பாரென்போம்! " என்று பாடினார்.

இப்படியெல்லாம் தைரியமாக ஆட்சிக்கே அறைகூவல் விடுத்த கம்பீரத்தலைவர் கலைஞர் அவர்களின் காலடிச் சுவட்டில் கழகத்தை வழிநடத்தும் திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களுக்கும் ஆட்சியதிகாரம் என்பது பெரிதல்ல.

எதிர்ப்பிலே வளர்ந்த தலைவர்!

எமர்ஜென்சியில் புடமிட்ட தலைவர்!

அவரைப்போலவே தி.மு.கழகத்தின் தொண்டர்கள், தோழர்கள், தளகர்த்தர்கள் எதையும் தாங்கும் இதயத்துடன்தான் பயணிக்கிறோம்.

ஆனால் அதேவேளையில் அவர் பார்த்து, பார்த்து வடிவமைத்த தொகுதியில் அவர் வெற்றி வாய்ப்பினை இழந்ததைத்தான் உலகத்தமிழரெல்லாம் சொல்லிச் சொல்லி, மனம் பதைத்தனர்.

முகலாய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி ஷாஜகான் 22 ஆயிரம் கட்டிடத் தொழிலாளர்களைக் கொண்டு, 20 ஆண்டுகள் தனது சிந்தையணு ஒவ்வொன்றிலும் ஊறிப்போன தாஜ்மகாலை உருவாக்கியது போலல்லவா? கொளத்தூர் தொகுதி இந்தியாவிலேயே அனைத்து நவீன வசதிகளுடன் கட்டமைக்கப்பட்ட மாடல் தொகுதியாக ஜொலித்தது.

சாலை வசதிகளென்ன!

பாலப் பணிகளென்ன!

பூங்காக்கள், நடைபாதை வசதிகளென்ன!

மருத்துவ, போக்குவரத்து, குளிரூட்டப்பட்ட பயணியர் நிறுத்தங்கள்தானென்ன!

எதைக் கண்டு, அல்லது எதில் மயங்கி எங்கள் திராவிட மாடல் முதலமைச்சருக்கு இந்தப் பரிசை கொளத்தூர் வாக்காளர்கள் தந்தனர்?

கம்ப ராமாயணத்தில் இராமன் வனவாசம் போன பொழுது, மக்கள் அழுதனர், மாடுகளும் அதன் கன்றுகளும் அழுதன.

மாடத்திலிருந்த பூனையும் அழுததென்பார் கம்பர்.

அதுகதை, கம்பனின் கவிதை. கற்பனையின் பெரு உச்சம்.

ஆனால் நமது தலைவர் தளபதியவர்கள் வெற்றி வாய்ப்பினை இழந்த செய்தியறிந்து, உலகத் தமிழர்கள் வருந்தினர், உண்மைத் தமிழர்கள் கலங்கினர். நன்றி மறவாத் தமிழர்கள் அழுதனர்.

எதிர்மறை எண்ணம் கொண்டோரும் ஏற்க மறுத்தனர்.

இவர்களுடன், " மரணம் மாவீரனுக்கு மலர்ச்செண்டு போன்றது!

மங்கையின் இதழைவிடச் சுவையானது! ' எனும் தலைவர் கலைஞரின் வீரவரிகளை சுவாசித்த தொண்டனும் இந்த முடிவை ஏற்கமுடியாமல் இன்னும், இன்னும் விழிகளைக் குளமாக்கியபடிதான் இருக்கிறார்கள்.

"நாளும் அழுது தீர்ந்ததாலே, கண்கள் ஏழையானதே! " என்றொரு திரைப்பாடலுண்டு.

அதுதான், அதுதான் எங்கள் நிலை.

பால்குடித்த மார்பையறுப்பதோ! என்று தலைவர் கலைஞர் அவர்கள் 2006 சட்டமன்றத் தேர்தலில் கழகம் வெற்றி பெற்றிருந்தாலும், என்னைப் போன்ற சிலரின் தோல்வியின் ரணங்களுக்கு மருந்திட முரசொலியில் முதல்வராய் அமர்ந்து கவிதை தீட்டினார்.

யாதும் ஊரே! யாவரும் கேளிர் என்று சொன்ன கனியன் பூங்குன்றனார் கூட பூங்குன்றம் என்ற தனது ஊரினை தனது பெயரோடு சேர்த்துக் கொண்டார் என்று சொல்லுவார்கள்.

அதுபோல இந்தியாவின் சக்தி வாய்ந்த தலைவரென்றாலும், நானிலம் போற்றும் மாநில முதல்வரென்றாலும், மாதத்திற்கு இருமுறையேனும் மறக்காமல் தனது தொகுதியான கொளத்தூருக்கு வந்திடுவாரே நமது தலைவர்.

( அறிவாலயம் சென்று பார்க்கும் அவகாசம் இல்லையென்றால், தலைவர் கொளத்தூர் செல்லும் புளியந்தோப்பு, பின்னிமில் சாலையோரம் நின்று ஒரு பதிவை நானெல்லாம் பலமுறை பதிந்ததுண்டு )

வழக்கறிஞர்

**வெ.அன்புவாணன்**

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்



எல்லாவற்றையும் கடந்து செல்லும் ஆறுதலை, தைரியத்தை, பக்குவத்தை, நம்பிக்கையை நமது தலைவரே தருகிறார். அறிவாலயத்தில்! ஆழ்வார்பேட்டை இல்லத்தில்! கழகத்தோழர்களின் கரங்களை இறுகப்பற்றி.

அவருக்கு மிகவும் பிடித்த தலைவர் கலைஞர் அவர்களின் நம்பிக்கையை நாணேற்றும் வரிகள், " கட்டிய நாய்களல்ல நாம்.

எட்டியமட்டும் பாய்வதற்கு! "

ஆம். கவலையை மறப்போம்!

களமாடுவோம்! வளமார் தமிழகத்தை வடித்தெடுத்த சிற்பிகள் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், திராவிடப் பெருவேந்தர் தளபதியவர்களின் படைவரிசையில் களமாடப் பெரும் அறிவுசார் சட்டமன்றப் படையுடன் புறப்பட்ட ஸ்திரமான,உரமான, நமக்கு வரமான மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் தலைமையில் அவையில் என்றும் போல் மக்கள் நலனுக்காய் குரல் கொடுப்போம்!

அரியாசனம் இல்லாமல் போனாலும், நிலையான அண்ணாவின் அறிவாலயம் இருக்கிறது.

அங்கமர்ந்து, ஆளும் மாய வர்க்கத்தின், பயாஸ்கோப் பரிவாரங்களின் அத்துமீறல்களுக்கு அணை போட்டுத் தடுத்திடுவார் நமது திராவிடப் பேரரசர் தளபதியவர்கள்.

அதற்கும் துணைநிற்கும் தூயவர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்போம்!

தி.மு.கழகம் எதிர்ப்பில் பூத்த நெருப்பு மலர்.

பாசாணத்தில் பூத்த பூ என்பதை மீண்டும், மீண்டும் ஞாலம் உணர, உரைத்திடுவோம்! உழைத்திடுவோம்!

ஆம்,

தி.மு.க...... , வாலடித்து மேலெழும் வரிப்புலி!

இது மன்னாதி, மன்னரையெல்லாம் பார்த்த, தி.மு.க.!

அந்த மதுரைவீரனையும் வளர்த்து, எதிர்த்த தி.மு.க.!

வாழ்க தலைவர் தளபதியவர்கள்!

வளர்க தி.மு.க.!

வெல்க உதயநிதியவர்கள்!